Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 6, No.2, 2025, (51-65)

# மாணவர்களின் வாசிப்பு நிலைபாடு: திறன்பேசி உலகில் உருவாகும் சவால்களும் வகுப்பறை உத்திகளும்

## Students' Reading Proficiency: Emerging Challenges and Classroom Strategies in the Smartphone Era

**Kingston Pal Thamburaj**

Asian Languages and Cultures Academic, National Institute of Education, Nanyang Technological University, Singapore

**Sasikumar Ponnalagu**

Asian Languages and Cultures Academic, National Institute of Education, Nanyang Technological University, Singapore

email: palthamburaj.k@nie.edu.sg

*Corresponding author:* **Kingston Pal Thamburaj**

**Received:** 05 Oct 2025; **Revised:** 20 Nov 2025; **Accepted:** 08 Dec 2025; **Published:** 18 Dec 2025

**To cite this article (APA):** Thamburaj, K. P., & Ponnalagu, S. (2025). மாணவர்களின் வாசிப்பு நிலைபாடு: திறன்பேசி உலகில் உருவாகும் சவால்களும் வகுப்பறை உத்திகளும்: Students' Reading Proficiency: Emerging Challenges and Classroom Strategies in the Smartphone Era. Journal of Valartamil, 6(2), 51-65. https://doi.org/10.37134/jvt.vol6.2.6.2025

**Abstract:** In today's smartphone-driven world, the decline in students' reading proficiency has become a major educational concern. The excessive use of short-form digital content, videos, and social media has affected students' concentration and attentive observation skills, disrupting their sustained reading habits. This paper employs the Observation Method, based on close monitoring of third-year Tamil language students' actual reading behavior. Through continuous observation, the researcher identified key reading difficulties such as weak letters, sound association, reading without pauses, lack of emotional expression, and unclear pronunciation. Additional factors like overuse of smartphones, limited parental supervision, and lack of a home reading environment further contributed to poor reading development. The paper highlights these problems and suggests practical strategies teachers can adopt to address them effectively. It concludes that consistent teacher guidance, structured reading activities, and parental involvement are essential to rebuild reading proficiency and nurture meaningful reading habits among students in the smartphone era.

**Keywords:** Reading proficiency, observation method, concentration, student difficulties, smartphone era, Tamil education.

## ஆய்வுச் சுருக்கம்

இன்றைய திறன்பேசி உலகில், மாணவர்களின் வாசிப்புத் திறன் குறைபாடு கல்வியியலின் முக்கியமான பிரச்சினையாக மாறியுள்ளது. குறுந்தகவல், காணொளி, சமூக ஊடகங்கள் போன்றவற்றின் அதிகப்படியான பயன்பாடு, மாணவர்களின் **கவனக்குவிப்பையும் உற்று நோக்கும் திறனையும்** பாதித்து, நீண்டகால வாசிப்பு பழக்கத்தைச் சீர்குலைத்துள்ளது. இக்கட்டுரை **உற்று நோக்குதல் முறையின் (Observation Method)** அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வாளர் மூன்றம் ஆண்டு தமிழ்மொழி மாணவர்களின் வாசிப்பு நடைமுறைகளை நேரடியாகக் கவனித்து, அவர்களின் வாசிப்புத் திறனில் காணப்படும் சிக்கல்களைப் பதிவு செய்தார். ஆய்வின் போது மாணவர்கள் எழுத்து ஒலி தொடர்பு இல்லாமல் வாசித்தல், நிறுத்தற்குறிகளைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து வாசித்தல், உணர்ச்சி வெளிப்பாடின்றி உரையாடல் வாசித்தல், உச்சரிப்புத் தெளிவின்மை போன்ற சிக்கல்கள் கண்டறியப்பட்டன. மேலும், திறன்பேசியின் அதிகப்படியான பயன்பாடு, பெற்றோர் கண்காணிப்பு இல்லாமை, வீட்டில் வாசிப்பு சூழல் குறைவு ஆகியவை மாணவர்களின் வாசிப்பைப் பாதித்தன. இக்கட்டுரை, மாணவர்களின் வாசிப்பில் ஏற்படும் இச்சிக்கல்களை ஆராய்வதோடு, ஆசிரியர் மேற்கொள்ளக்கூடிய தகுந்த வழிமுறைகளையும் முன்வைக்கிறது. கல்விச் சூழலில் மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்துவதில் ஆசிரியரின் வழிகாட்டுதலும் தொடர்ச்சியான ஊக்குவிப்பும் மிக முக்கியம் என்பதை இது வலியுறுத்துகிறது.

**கருச்சொற்கள்:** வாசிப்புத் திறன், உற்று நோக்குதல் முறை, கவனக்குவிப்பு, மாணவர் சிக்கல்கள், திறன்பேசி உலகம், தமிழ்க் கல்வி.

## அறிமுகம்

வாசிப்பு என்பது மொழிக் கற்றலின் மையக் கூறாகும். அது மனிதனின் அறிவு வளர்ச்சிக்கும், சிந்தனை ஆழத்திற்கும், சமூகப் புரிதலுக்கும் அடித்தளமாக விளங்குகிறது. தமிழ்மொழியின் வரலாற்றில், வாசிப்பை அறிவின் வாயிலாகக் கருதும் பாரம்பரியம் தொன்மையானது.

ஔவையார் “நீட்டோலை வாசியானை நெடுமரம்” எனப் பாடியதிலிருந்தே, வாசிப்பின் ஆளுமையும், அதன் வாழ்க்கை நோக்கும் வலியுறுத்தப்பட்டுள்ளன (அருளீஸ்வரி நாராயணன், 2001). இன்றைய திறன்பேசி உலகில், கல்வியுடன் தொடர்பில்லாத குறுந்தகவல், சமூக ஊடகம், காணொளித் தளங்கள் போன்றவற்றின் அதீதப் பயன்பாடு மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தைத் தளர்த்தியுள்ளது. மாணவர்கள் நீண்ட நேரம் ஓர் உரையில் கவனத்தைத் திரட்ட முடியாமலும், கவனக்குவிப்பும் உற்று நோக்கும் திறனும் குறைவதாலும், வாசிப்பின் அடிப்படை நோக்கம் பொருள் புரிதல் பாதிக்கப்படுகிறது. இந்தப் புதிய கல்விச் சூழல், வாசிப்பை ஒரு சுயநினைவோடு அணுகும் செயலாக அல்லாது, வேகமான பார்வையாக மாற்றியுள்ளது (Rajandran, Thamburaj & Ravi, 2024). வாசிப்புத் திறன் குறைபாடு கல்வியியலில் இன்றைய முக்கியப் பிரச்சினையாகும். வாசிப்புத் திறன் என்பது எழுத்தை அடையாளம் காணுதல், ஒலிப்புணர்வு, சரளமாக வாசித்தல், பொருள் புரிதல் ஆகிய நான்கு கூறுகளைக் கொண்டது (கோவிந்தசாமி, 1983). இதிலிருந்து ஏதேனும் ஒரு கூறு குறைந்தால் வாசிப்புத் திறனும் குறைகிறது. குறிப்பாக, திறன்பேசியின் மிகைச் செயற்பாடு மாணவர்களின் சொற்களஞ்சியம், கவனக்குவிப்பு, வாசிப்புப் பொறுமை ஆகியவற்றைப் பாதிக்கிறது. இதனால், மாணவர்கள் எழுத்து–ஒலித் தொடர்பை உணராமல் வாசிக்கின்றனர்; நிறுத்தற்குறிகளைப் பொருட்படுத்தாமல் தொடர்கிறார்கள்; உணர்ச்சி வெளிப்பாடின்றி உரையாடலை வாசிக்கின்றனர்.

சிங்கப்பூரின் இருமொழிச் சூழலில் (கோவிந்தசாமி, 1983), தமிழை இரண்டாவது மொழியாகக் கற்கும் மாணவர்களிடையே வாசிப்பு திறனில் காணப்படும் சவால்கள் மேலும் தீவிரமாகின்றன. மாணவர்களுக்கு ஒலியன் விழிப்புணர்வு (phonemic awareness) குறைவாகவும், எழுத்து அமைப்புகளின் புரிதல் மந்தமாகவும் காணப்படுகிறது. இதனால் வாசிப்பின் சரளத்தன்மை (fluency) குறைகிறது. அருளீஸ்வரி நாராயணன் (2001) கூறுவதுபோல், வாசிப்புத் திறனின் மேம்பாடு ஒருங்கிணைந்த கற்றல் அணுகுமுறைகளில் தான் நிகழ்கிறது. எனவே, ஆசிரியர் வழிநடத்தும் செயல்முறை, மாணவர் மையக் கற்றல் ஆகியவற்றின் சமநிலை அவசியம்.

அதேபோல், Thamburaj & Sivanathan (2020) வலியுறுத்தியபடி, தொழில்நுட்பம், பாரம்பரியக் கற்பித்தல் முறைகள் இணைந்தால் மாணவர்களின் வாசிப்புத் திறனும், சிந்தனை ஆழமும் மேம்படும்.

ஆனால் திறன்பேசி உலகில் தகவல் மிகை (information overload) மாணவர்களை வேகமான வாசிப்பிற்கும், மேற்பரப்புப் புரிதலுக்கும் வழிவகுக்கிறது. இது கல்வித் தரத்தையும் ஆழ்ந்த சிந்தனையையும் பாதிக்கக்கூடியது.

இந்தச் சூழலில், மாணவர்களின் வாசிப்பு திறனை ஆராய்வதும், அதில் காணப்படும் சிக்கல்களை உற்று நோக்குதல் முறையின் (Observation Method) மூலம் பதிவு செய்வதும் காலத்தின் அவசியமாகும். இக்கட்டுரை, மாணவர்களின் வாசிப்பில் காணப்படும் முக்கியச் சிக்கல்களைக் கவனக்குவிப்புக் குறைவு, ஒலி, எழுத்துத் தொடர்புச் சிக்கல்கள், உச்சரிப்புப் பிழைகள், வாசிப்பு ஆர்வக் குறைவு ஆகியவற்றை அடையாளம் கண்டு, அவற்றைத் தீர்க்கக்கூடிய வகுப்பறை உத்திகளை முன்வைப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வு, வாசிப்புத் திறனின் குறைப்பை ஒரு தனிப்பட்ட சிக்கலாக மட்டுமே கருதாது திறன்பேசி உலகில் உருவாகியுள்ள புதிய கல்விச் சவாலாகக் கருதுகிறது. வாசிப்பின் ஆழமும் அர்த்தமும் மீண்டும் மாணவர்களின் கற்றல் நடைமுறைகளில் வேரூன்ற வேண்டிய அவசியத்தை இது வலியுறுத்துகிறது.

## 2. ஆய்வின் நோக்கம் (Objectives of the Study)

இக்கட்டுரையின் பிரதான நோக்கம், திறன்பேசி உலகில் மாணவர்களின் வாசிப்புத் திறனில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், அதனால் உருவாகும் சிக்கல்களையும் உற்று நோக்குதல் முறையின் (Observation Method) மூலம் ஆய்வு செய்வதாகும். இவ்வாய்வு மாணவர்களின் வாசிப்பு நடைமுறைகள், அவர்களின் மனப்பாங்கு, வகுப்பறைச் செயல்பாடுகளில் காணப்படும் வாசிப்பு ஈடுபாட்டின் அளவைப் புரிந்துகொள்வது ஆகியவற்றை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. குறிப்பாக, இவ்வாய்வு பின்வரும் மூன்று நோக்கங்களை மையப்படுத்துகிறது:

### மாணவர்களின் வாசிப்புத் திறனில் உள்ள குறைபாடுகளை அடையாளம் காணுதல்.

வாசிக்கும் போது எழுத்து–ஒலி இணைப்பு, நிறுத்தற்குறி புரிதல், உச்சரிப்புத் தெளிவு, வாசிப்பு வேகம், பொருள் புரிதல் போன்ற அம்சங்களில் மாணவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை உற்று

நோக்குதல் வழியாகப் பதிவு செய்தல். ஆசிரியர் பயன்படுத்தும் வகுப்பறை உத்திகள் மாணவர்களின் வாசிப்பு ஈடுபாட்டை எவ்வாறு மேம்படுத்துகின்றன என்பதை ஆராய்தல். வகுப்பறையில் வாசிப்பு அட்டை, வாசிப்புப் போட்டி, இணை வாசிப்பு போன்ற செயல்பாடுகள் மாணவர்களின் ஆர்வம், உச்சரிப்புத் திறன்,தன்னம்பிக்கையில் ஏற்படுத்தும் மாற்றங்களை மதிப்பிடுதல். பெற்றோரின் பங்கு, குடும்பச் சூழல் வாசிப்புத் திறனில் ஏற்படுத்தும் தாக்கத்தை மதிப்பிடுதல். வீட்டில் வாசிப்பிற்கான நேரம், திறன்பேசிப் பயன்பாட்டின் அளவு, பெற்றோர் கண்காணிப்பு ஆகியவை மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்திலும் திறனிலும் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதைக் காணுதல்.

## 3. ஆய்வு முறை (Methodology)

இவ்வாய்வு உற்று நோக்குதல் முறை (Observation Method) அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இந்த முறை, மாணவர்கள் இயல்பாகச் செயல்படும் வகுப்பறைச் சூழலில் அவர்கள் காட்டும் வாசிப்பு நடத்தை, உச்சரிப்பு நடை, ஈடுபாட்டு அளவை ஆகியவற்றை நேரடியாகக் கவனித்துப் பதிவுசெய்வதற்குப் பயன்பட்டது. இம்முறை, ஆய்வாளருக்கு மாணவர்களின் உண்மையான வாசிப்புச் சவால்களைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பை வழங்குகிறது. ஆய்வில் பங்கேற்றவர்கள் ஓ ர் அரசு நடுநிலைப் பள்ளியில் தமிழை இரண்டாவது மொழியாகக் கற்கும் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் 20 பேர் ஆவர். இம்மாணவர்களின் வயது 14 முதல் 15 வரை மாறுபட்டது. அவர்கள் வாசிப்புத் திறனில் வித்தியாசமான நிலைகளில் இருந்தனர் — சிலர் சரளமாக வாசிக்கக் கூடியவர்களாகவும், சிலர் எழுத்து–ஒலி தொடர்பில் சிரமப்படும் மாணவர்களாகவும் இருந்தனர்.

**ஆய்வாளர்கள் மாணவர்களின் வாசிப்பை மூன்று முக்கியச் சூழல்களில் உற்று நோக்கினார்:**

வகுப்பறை வாசிப்பு நேரத்தில் (Textbook reading sessions)

குழு, இணை வாசிப்பு செயல்பாடுகளில் (Paired and Group Reading Activities)

வீட்டுப்பாட வாசிப்பு விவாதங்களில் (Home reading follow-up discussions)

இந்தக் கவனிப்பின் போது மாணவர்கள் வாசிக்கும் வேகம், உச்சரிப்புத் தெளிவு, நிறுத்தற்குறி பின்பற்றல், வாசித்த உரையின் பொருள் புரிதல், உணர்ச்சி வெளிப்பாடு ஆகிய கூறுகள் பதிவு செய்யப்பட்டன. மேலும், மாணவர்கள் வாசிக்கும் போது திறன்பேசிப் பயன்பாட்டின் தாக்கமும் ஆய்வில் குறிப்பிடப்பட்டது. சில மாணவர்கள் திறன்பேசியின் உபயோகத்தால் சிந்தனைச் சிதறலுக்குள்ளாகி, கவனக்குவிப்பை இழந்தனர்.

**ஆய்வில் பயன்படுத்தப்பட்ட கருவிகள் பின்வருமாறு:**

வாசிப்பு உற்று நோக்குதல் பதிவேடு (Observation Checklist): ஒவ்வொரு மாணவரின் வாசிப்பு நடைமுறைகள் பற்றிய பதிவுகள்.

ஆசிரியர் பிரதிபலிப்புக் குறிப்பேடு (Teacher Reflective Journal): வகுப்பறைச் செயல்பாடுகளில் ஆசிரியர் கண்ட மாற்றங்கள்.

ஆய்வாளர் மாணவர்களின் வாசிப்பை நெருக்கமாகக் கவனித்து, ஒவ்வொருவரின் முன்னேற்றத்தைத் தெளிவாகப் பதிவுசெய்தார். இதன் மூலம், வாசிப்பில் காணப்படும் சிக்கல்களின் தன்மையையும் காரணங்களையும் அடையாளம் காண முடிந்தது. மேலும், ஆசிரியர் வகுப்பறையில் மேற்கொண்ட சில ஊக்குவிப்பு உத்திகள் வாசிப்புப் போட்டி, வாசிப்பு அட்டைகள், “இள ஆசிரியர்” முறை, குழு வாசிப்பு ஆகியன மாணவர்களின் வாசிப்பு ஈடுபாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தின. இதன் மூலம் மாணவர்கள் வாசிப்பில் நம்பிக்கையுடன் பங்கேற்கத் தொடங்கினர். இவ்வாறு, உற்று நோக்குதல் முறை மாணவர்களின் வாசிப்புக் குறைபாடுகளைப் புரிந்துகொள்ளவும், ஆசிரியர் கற்பித்தல் உத்திகளின் விளைவுகளை மதிப்பிடவும் பயனுள்ள அணுகுமுறையாக அமைந்தது. இந்த ஆய்வு, மாணவர்களின் வாசிப்புத் திறனைக் கண்டறிவதோடு மட்டுமல்லாமல், திறன்பேசி உலகில் உருவாகும் புதிய வாசிப்புச் சவால்களைக் கல்வியியல் கோணத்தில் வெளிக்கொணர்கிறது.

## 4. உற்று நோக்குதலின் விளைவுகலும் கண்டறியப்பட்ட சிக்கல்கலும் (Findings and Observations)

ஆய்வாளர் மாணவர்களின் வாசிப்பு நடைமுறைகளை நீண்டகாலமாக உற்று நோக்குதல் முறையின் மூலம் கவனித்தபோது, பல்வேறு சிக்கல்கள்,

குறைபாடுகள், வாசிப்பில் ஏற்படும் மனப்பாங்கு மாற்றங்கள் ஆகியன தெளிவாகப் பதிவாகின. இந்தக் கவனிப்புகள் வகுப்பறை வாசிப்பு, குழு வாசிப்பு, தனிப்பட்ட வாசிப்பு ஆகிய செயல்பாடுகளில் இருந்து பெறப்பட்டன.

### 4.1 வாசிப்புத் திறனில் காணப்பட்ட முக்கியக் குறைபாடுகள்

### எழுத்து–ஒலி இணைப்புக் குறைபாடு

பல மாணவர்கள் எழுத்துகளைப் பொருத்தமான ஒலிகளுடன் இணைத்து வாசிக்க முடியாமல் இருந்தனர். இது அவர்களின் phonemic awareness குறைவைக் காட்டுகிறது. சிலர் "க்", "ட்", "ண்" போன்ற மெய் எழுத்துகளைச் சரியாக உச்சரிக்க முடியவில்லை. (கோவிந்தசாமி, 1983; Rajandran et al., 2024) ஆகியோர் குறிப்பிட்டபடி, எழுத்து–ஒலித் தொடர்பு குறைபாடு வாசிப்புச் சரளத்தன்மையையும் பொருள் புரிதலையும் பாதிக்கிறது.

### நிறுத்தற்குறிகளும் வாக்கியப் பிழைகளும்

மாணவர்கள் நிறுத்தற்குறிகளைக் கவனிக்காமல் தொடர்ந்து வாசிக்கும் பழக்கத்தில் இருந்தனர். இதனால் உரையின் பொருள் மாறியவாறு வெளிப்பட்டது. இது வாசிப்பின் சொற் இசையும், கருத்து ஓட்டத்தையும் பாதிக்கிறது.

### உச்சரிப்பும் சொல் தெளிவின்மையும்

சில மாணவர்கள் ஒரே சொற்றொடரையும் பல்வேறு முறைகளில் பிழையாக உச்சரித்தனர். குறிப்பாக "ழ", "ற", "ன" போன்ற எழுத்துகளின் உச்சரிப்பில் மாறுபாடு காணப்பட்டது. இதனால் வாசிப்பின் தெளிவும் அழகும் குறைந்தது.

### உணர்ச்சி வெளிப்பாடின்மையும் வாசிப்பு உயிர்மையின்மையும்

மாணவர்கள் வாசிக்கும் போது உரையுடன் உணர்வோடு தொடர்பு கொள்ள முடியவில்லை. இதனால் வாசிப்பின் உயிர்மையும் (reading expression) குறைந்து, அது வெறும் சொல்லெழுத்து வாசிப்பாக மாறியது.

**கவனக்குவிப்பும் உற்று நோக்கும் திறன் குறைவும்**

திறன்பேசிப் பயன்பாட்டின் விளைவாக, மாணவர்களின் கவனக்குவிப்புக் காலம் மிகக் குறைந்தது. 5 முதல் 7 நிமிடங்கள் வாசித்தவுடன் மனம் சிதறி வேறு விஷயங்களுக்குச் செல்கின்றது. இது வாசிப்புப் பொறுமையையும் (reading stamina) பாதித்தது.

**வாசிப்பில் ஈடுபாட்டின்மையும் ஆர்வக் குறைவும்**

பல மாணவர்கள் வாசிப்பை ஒரு கடமையாகவே எடுத்துக்கொண்டனர்; வாசிப்பின் அனுபவத்தைச் சுவையாக உணரவில்லை. இதற்குக் காரணமாகப் பெற்றோர் வாசிப்பு ஊக்குவிப்பு இல்லாமை, திறன்பேசியின் மீதான சார்பு ஆகியன காணப்பட்டன.

**4.2 வகுப்பறை உத்திகள் மூலம் ஏற்பட்ட மாற்றங்கள்**

ஆசிரியர் மேற்கொண்ட சில வகுப்பறை உத்திகள் மாணவர்களின் வாசிப்பு ஈடுபாட்டில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தின.

**வாசிப்பு அட்டைகள் (Reading Cards):**

மாணவர்கள் ஒவ்வொரு நாளும் வாசித்த பகுதிகளைக் குறிக்கும் வாசிப்பு அட்டைகள் அவர்களின் பொறுப்புணர்வை வளர்த்தன. இதனால் மாணவர்கள் தினசரி வாசிப்பைத் தொடர்ந்தனர்.

**“இள ஆசிரியர்” முறை (Junior Teacher Model):**

திறமையான வாசிப்பாளர்கள் மற்ற மாணவர்களுக்கு வழிகாட்டியாக நியமிக்கப்பட்டனர். இது பரஸ்பரக் கற்றலையும், ஒத்துழைப்பையும் உருவாக்கியது.

**வாசிப்புப் போட்டி (Reading Competition):**

ஆர்வத்தை ஊக்குவிக்கும் நோக்கில் வாசிப்புப் போட்டிகள் நடத்தப்பட்டன. மாணவர்கள் தங்கள் உச்சரிப்பை மேம்படுத்த முயன்றனர்.

**வெகுமதி முறை (Reward System):**

சிறந்த வாசிப்பாளர்களுக்குச் சிறு பாராட்டுகள் வழங்கப்பட்டதால், மாணவர்கள் வாசிப்பில் அதிக ஈடுபாட்டுடன் பங்கேற்றனர்.

### 4.3 மொத்தக் கவனிப்பின் விளைவுகள்

உற்று நோக்குதல் வழியாகப் பெற்ற தரவுகள், மாணவர்களின் வாசிப்புத் திறனில் படிப்படியான முன்னேற்றத்தை வெளிப்படுத்தின. ஆரம்பத்தில் வாசிப்பில் தயக்கம் கொண்டிருந்த மாணவர்கள் பின்னர் தன்னம்பிக்கையுடன் வாசிக்கத் தொடங்கினர். சரியான உச்சரிப்பும், உரை புரிதலும் . வாசிப்பின் மீது தன்னார்வமும் தன்னம்பிக்கையும் அதிகரித்தன. இவ்வாய்வின் முடிவுகள், வாசிப்புத் திறனை மேம்படுத்தும் பணியில் ஆசிரியர் வழிநடத்தல், பெற்றோர் பங்கு, மாணவர் முயற்சி ஆகிய மூன்றும் இணைந்து செயல்படுவது அவசியம் என்பதை வலியுறுத்துகின்றன.

## 5. வகுப்பறை உத்திகள் (Intervention Strategies)

உற்று நோக்குதல் முறையின் மூலம் மாணவர்களின் வாசிப்பில் காணப்பட்ட சிக்கல்கள் — உச்சரிப்புப் பிழைகள், நிறுத்தற்குறிப் புறக்கணிப்பு, கவனக்குவிப்புக் குறைவு, வாசிப்பு ஆர்வமின்மை போன்றவை — அடையாளம் காணப்பட்ட பின், ஆசிரியர் வகுப்பறையில் பல புதுமையான, செயற்பாடுகளைக் கொண்ட உத்திகளை நடைமுறைப்படுத்தினார். இத்திட்டங்கள் மாணவர்களின் வாசிப்பு ஈடுபாடு, சரளத்தன்மை, தன்னம்பிக்கை ஆகியவற்றை வளர்க்கும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டன.

### 5.1 வாசிப்பு அட்டைகள் (Reading Cards)

மாணவர்கள் தினசரி வாசிக்கும் பகுதிகள் குறித்துப் பதிவு செய்யும் சிறு வாசிப்பு அட்டைகள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு மாணவரும் ஒரு குறுகிய பத்தியைத் தேர்ந்தெடுத்து வாசித்த பின் அந்தத் தகவலை அட்டையில் பதிவு செய்தனர். இது அவர்களின் தொடர்ச்சியான வாசிப்புப் பழக்கத்தை உருவாக்கி, பொறுப்புணர்வை வளர்த்தது. வாசிப்பு

அட்டைகள் மூலம் ஆசிரியர் ஒவ்வொரு மாணவரின் முன்னேற்றத்தையும் கண்காணிக்க முடிந்தது.

### 5.2 "இள ஆசிரியர்" முறை (Junior Teacher Model)

வாசிப்பில் திறமையான மாணவர்கள் "இள ஆசிரியர்" என நியமிக்கப்பட்டு, தங்கள் சகமாணவர்களுக்கு வாசிப்பில் உதவி செய்தனர். இது சக மாணவர் வழிநடத்தல் (Peer-Assisted Learning) முறையின் அடிப்படையில் செயல்பட்டது. இதன் மூலம் திறமையான மாணவர்கள் தங்கள் வழிநடத்தல் திறனை வளர்த்தனர்; மற்ற மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் வாசிக்கத் தொடங்கினர்.

### 5.3 குழு வாசிப்பும் இணை வாசிப்பும் (Group and Paired Reading)

மாணவர்களை 3–4 பேர் கொண்ட சிறு குழுக்களாகப் பிரித்து வாசிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு குழுவிலும் ஒருவரை "குழு வாசிப்பாளர்" என நியமித்து, வாசிக்கும் போது பிழைகளைச் சுட்டிக்காட்டித் திருத்த அனுமதிக்கப்பட்டது. இதன் மூலம் பொறுப்புணர்வு, ஒத்துழைப்பு, பரஸ்பர கற்றல் ஆகிய பண்புகள் வளர்ந்தன.

### 5.4 வாசிப்புப் போட்டிகலும் வெகுமதி முறையும் (Reading Competitions and Reward System)

மாணவர்களின் ஆர்வத்தை ஊக்குவிக்க வாசிப்புப் போட்டிகள் நடத்தப்பட்டன. சிறந்த வாசிப்பாளர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ், புத்தகப் பரிசு அல்லது "வாசிப்பு நட்சத்திரம்" எனும் பதக்கம் வழங்கப்பட்டது. இது மாணவர்களிடையே ஆர்வத்தையும் ஆரோக்கியமான போட்டியையும் உருவாக்கியது. வெகுமதி முறை மாணவர்களின் வாசிப்பை மகிழ்ச்சியூட்டும் செயலாக மாற்றியது.

### 5.5 வெளிப்படையான வாசிப்புப் பயிற்சி (Expressive Reading Practice)

ஆசிரியர் மாணவர்களை வாசிக்கும் போது உணர்ச்சியுடன் (intonation) வாசிக்க ஊக்குவித்தார். இது வாசிப்பின் உயிர்ம்மையையும் (reading

Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 6, No.2, 2025, (51-65)

expression) அர்த்தபூர்வமான புரிதலையும் மேம்படுத்தியது. குறும்பட வாசிப்பு (short dramatic reading) வழியாக மாணவர்கள் வாசிப்பில் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

### 5.6 பெற்றோர் பங்கேற்பு (Parental Involvement)

பெற்றோர்களுக்கு மாணவர்களின் வாசிப்புத் திறன் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. வீட்டில் தினசரி 10–15 நிமிடங்கள் வாசிப்புக்காக ஒதுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் இணைந்து வாசிப்பில் பங்கேற்றனர். இது இல்ல வாசிப்புப் பண்பாட்டை (home reading culture) உருவாக்கியது.

### 5.7 உத்திகளின் விளைவுகள்

இத்தகைய உத்திகள் மூலம் மாணவர்களின் வாசிப்புத் திறனில் பல்வேறு நேர்மறை மாற்றங்கள் ஏற்பட்டன. வாசிப்பின் வேகம், சரளத்தன்மை, உச்சரிப்புத் தெளிவு ஆகிய திறன்கள் மேம்பட்டன.

வாசிப்பின் மீது ஆர்வமும் தன்னம்பிக்கையும் உருவானது. திறன்பேசிப் பயன்பாட்டுக்கான நேரம் குறைந்தது. அதஇறகுப் பதிலாக வாசிப்பு நேரம் அதிகரித்தது. வகுப்பறைச் சூழல் கற்றல் மையமாக (learning-oriented environment) மாறியது. இவ்வாறு, ஆசிரியர் மேற்கொண்ட வகுப்பறை உத்திகள் மாணவர்களின் வாசிப்புத் திறனையும், கவனக்குவிப்பையும், மொழி உணர்வையும் மேம்படுத்தியுள்ளன. இத்திட்டங்கள், வாசிப்பைக் கடமையாகக் கருதச் செய்யாமல் மகிழ்ச்சியான கற்றல் அனுபவமாக மாற்றியுள்ளன.

## 6. விவாதம் (Discussion)

இவ்வாய்வில் உற்று நோக்குதல் முறையின் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள், திறன்பேசி உலகில் மாணவர்களின் வாசிப்புத் திறன் பல்வேறு காரணிகளால் பாதிக்கப்படுவதைத் தெளிவாகக் காட்டுகின்றன. மாணவர்கள் வாசிக்கும்போது காணப்பட்ட சிக்கல்கள் — எழுத்து–ஒலி தொடர்பின்மை, நிறுத்தற்குறிப் புறக்கணிப்பு, உச்சரிப்புப் பிழைகள்,

வாசிப்பு ஆர்வக் குறைவு, கவனக்குவிப்பு இல்லாமை ஆகிய அனைத்தும் கல்விச் சூழலில் புதிய சவால்களாக உருவாகியுள்ளன.

முதலாவது, **திறன்பேசிப் பயன்பாட்டின் தாக்கம்** வாசிப்பில் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பல மாணவர்கள் குறுநேரக் காணொளி, விளையாட்டு, சமூக ஊடகங்களில் செலவிடும் நேரம் ஆகியவற்றால் அவர்களது வாசிப்புக்கான மனப்பக்குவமும் பொறுமையும் குறைந்துள்ளன. Thamburaj, Rajandran & Sivanathan (2024) குறிப்பிடுவது போல, தகவல்தொடர்பு சாதனப் பயன்பாட்டு வேகத்தின் மீதான பழக்கவழக்கம் ஆழ்ந்த வாசிப்பைப் (deep reading) புறக்கணிக்கச் செய்கிறது. இதனால் மாணவர்கள் வாசிப்பை ஆழ்ந்து புரிந்து கொள்ளாமல் மேலட்ட்டமாக மட்டுமே அணுகுகிறார்கள்.

இரண்டாவது, **கவனக்குவிப்பும் உற்று நோக்கும் திறன் குறைவும்** வாசிப்புத் திறனை நேரடியாகப் பாதிக்கிறது. Govindasamy (1983) மற்றும் Nirmala (2008) ஆகியோரின் கருத்துப்படி, நீண்ட வாசிப்புக்கான மனத் தயாரிப்பும் சிந்தனை ஆழமும் குறைந்தால், வாசிப்பின் பொருள் உணர்வும் குறையும். இவ்வாய்விலும் மாணவர்கள் 5–10 நிமிடங்களுக்குப் பிறகு மனம் சிதறுவது கண்காணிக்கப்பட்டது. இதன் விளைவாக, மாணவர்கள் ஒரு வாக்கியத்தின் முழுப் பொருளையும் அறியாமலே வாசிப்பைத் தொடர்கிறார்கள்.

மூன்றாவது, **பெற்றோர் கண்காணிப்பு இல்லாமையும் வீட்டில் வாசிப்புப் பண்பாட்டின்மையும்** முக்கியக் காரணிகளாகும். Rajandran & Thamburaj (2023) குறிப்பிடுவது போல, வீட்டில் வாசிப்புச் சூழல் இல்லாத குழந்தைகள் பள்ளி வாசிப்பிலும் தன்னம்பிக்கையின்மையைக் காண்பிக்கின்றனர். இவ்வாய்விலும் சில மாணவர்கள் பெற்றோர் வாசிப்பை ஊக்குவிக்கவில்லை என்றும், திறன்பேசிப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தவில்லை என்றும் தெரிவித்தனர்.

நான்காவது, **ஆசிரியர் வழிநடத்தலும் வகுப்பறை உத்திகலும்** வாசிப்பில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்திய முக்கிய அம்சங்களாக அமைந்தன. வாசிப்பு அட்டைகள், “இள ஆசிரியர்” முறை, மற்றும் வாசிப்புப் போட்டிகள் மாணவர்களின் உச்சரிப்புத் திறனையும் ஈடுபாட்டையும் மேம்படுத்தின. இது Arumugum, Nadeson & Thamburaj (2021) குறிப்பிடும் “செயற்பாட்டுக் கற்றல் அணுகுமுறை (Active Learning Approach)” என்ற கருத்துடன் ஒத்துப்போகிறது.

இவ்வாய்வில் மாணவர்கள் ஆரம்பத்தில் வாசிப்பில் அச்சத்துடன் இருந்தாலும், ஆசிரியர் தொடர்ந்து ஊக்குவித்ததன் மூலம் அவர்களின் வாசிப்புச் சரளத்தன்மையும் (fluency) வெளிப்பாட்டுத் திறனும் (expression) மேம்பட்டன. ஆசிரியர் உத்திகள் மாணவர்களுக்கு **வாசிப்பு என்பது கடமையல்ல, அனுபவம்** என்பதை உணர்த்தின.

மேலும், வாசிப்பில் காணப்பட்ட சிக்கல்கள் **மொழித்திறனின் குறைபாடாக மட்டும் அல்லாது, சமூகம், தொழில்நுட்பப் பிணைப்புகளின் விளைவாகவும்** இருக்கின்றன என்பதை இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது. திறன்பேசிப் பயன்பாடு, வேகமான தகவல் பரிமாற்றம், குறுகிய கவன நேரம் ஆகியவை மாணவர்களின் வாசிப்பு நடைமுறையை மாற்றியமைத்துள்ளன.

இவ்வாய்வின் விளைவுகள், கல்வி அமைப்பில் வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்கான புதிய அணுகுமுறைகள் தேவை என்பதை வலியுறுத்துகின்றன. ஆசிரியர்கள் வாசிப்பை மையப்படுத்திய செயற்பாடுகளை (reading-centered activities) வடிவமைத்தல், பெற்றோர் கண்காணிப்பு வலுப்படுத்தல், திறன்பேசி பயன்பாட்டை கட்டுப்படுத்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தல் ஆகியவை அவசியம்.

## 7. முடிவுகள் (Conclusion)

இவ்வாய்வு, திறன்பேசி உலகில் மாணவர்களின் வாசிப்புத் திறனில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை **உற்று நோக்குதல் முறையின்** மூலம் ஆழமாக ஆராய்கிறது. ஆய்வின் விளைவுகள், மாணவர்களின் வாசிப்புத் திறனில் ஏற்பட்ட சரிவு, தொழில்நுட்பத்தின் நேரடித் தாக்கமாக மட்டும் அல்லாது, குடும்பச் சூழல், பள்ளி நடைமுறை, மாணவர்களின் மனப்பாங்கு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த விளைவாக அமைந்துள்ளது என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

மாணவர்களின் வாசிப்புத் திறனில் காணப்பட்ட முக்கியக் குறைபாடுகள் — எழுத்து–ஒலி இணைப்புச் சிக்கல், நிறுத்தற்குறிப் புறக்கணிப்பு, உச்சரிப்புப் பிழைகள், கவனக்குவிப்பு, உற்று நோக்கும் திறன் குறைவு ஆகியவை வாசிப்பின் சரளத்தன்மையையும் பொருள் புரிதலையும் பாதிக்கின்றன. இதேபோல், திறன்பேசியின் அளவுக்கு மீறிய பயன்பாடு மாணவர்களின் மனதையும் நேரத்தையும் சிதறடித்து, வாசிப்பைத் தொடர் பழக்கமாக உருவாக்குவதில் தடை விளைவிக்கிறது.

அதே நேரத்தில், ஆசிரியர் மேற்கொண்ட வகுப்பறை உத்திகள் மாணவர்களின் வாசிப்பு திறனில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தின. வாசிப்பு அட்டைகள், வாசிப்புப் போட்டிகள், "இள ஆசிரியர்" முறை, வெளிப்படையான வாசிப்புப் பயிற்சிகள் ஆகியன மாணவர்களின் ஈடுபாட்டையும் தன்னம்பிக்கையையும் உயர்த்தின. இத்தகைய உத்திகள் வாசிப்பைக் கடமையிலிருந்து அனுபவமாக மாற்றியுள்ளன.

இவ்வாய்வின் முடிவுகள் பின்வரும் மூன்று முக்கியக் கருத்துகளை வலியுறுத்துகின்றன:

1. **வாசிப்புத் திறன் மேம்பாடு பல்வேறு காரணிகளின் ஒருங்கிணைவு ஆகும்.**
   ஆசிரியர் வழிநடத்தல், பெற்றோர் கண்காணிப்பு, மாணவரின் தனிப்பட்ட ஆர்வம் ஆகிய மூன்றும் ஒன்றிணைந்தால் வாசிப்புத் திறன் வலுப்படும்.
2. **திறன்பேசிப் பயன்பாட்டைச் சமநிலைப்படுத்தல் அவசியம்.**
   திறன்பேசி ஒரு கல்விக் கருவியாகப் பயன்படுத்தப்படலாம்; ஆனால் அதன் மீதான சார்பு குறைக்கப்பட வேண்டும். இதற்காகப் பள்ளி, பெற்றோர் ஒருங்கிணைந்த விழிப்புணர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
3. **வாசிப்பை மகிழ்ச்சியூட்டும் கற்றல் அனுபவமாக மாற்றல்**

மாணவர்கள் வாசிப்பை ஆர்வத்துடன் அணுக, வாசிப்பு நிகழ்வுகள், நாடக வாசிப்பு, படைப்பாற்றல் வாசிப்பு போன்ற புதுமையான செயல்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

முடிவாக, வாசிப்புத் திறன் என்பது மொழிக் கற்றலின் இதயமாகும். "**நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல்; தான் கற்ற நூல் அளவே ஆகுமாம் நுண் அறிவு**" என்ற பழமொழி கூறுவதுபோல், மாணவர்களின் அறிவு அவர்கள் வாசிக்கும் நூல்களுக்குச் சமமாகும். எனவே, ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்வியாளர்கள் இணைந்து, திறன்பேசித் தலைமுறையிலும் வாசிப்புப் பண்பாட்டை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும். இதுவே எதிர்கால மொழிக் கல்வியின் நிலையான பாதை ஆகும்.

## மேற்கோள்கள்:

Arumugum, L., Nadeson, B., & Thamburaj, K. P. (2021). Traditional teaching method–concept of moral education and pedagogy in Aathicuudi. Muallim Journal of Social Sciences and Humanities, 176–182.

Govindasamy, N. (1983). வாசிப்புக் கற்பித்தல்: சிங்கப்பூர் அனுபவம். கோவிந்தசாமியின், நா. கல்வியியல் ஆய்வுகள் (pp. 1–19). சென்னை: தமிழ்க்கலை அச்சகம்.

Ng, K. C. (2009). Pembelajaran Koperatif. Retrieved March 25, 2012, from http://www.teachersrock.net/koperatif.htm

Rajandran, N., Thamburaj, K. P., & Ravi, R. (2022). மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்திற்கும் வாசிப்புத் திறனிற்கும் உள்ள தொடர்பு [Correlation Between Reading Habit and Reading Skill Among Students]. *Journal of Valartamil*, 3(2), 34–46.

Rajandran, Nivahshini, Kingston Pal Thamburaj, and R. Ravi. "Correlation Between Reading Habit and Reading Skill Among Students." (2024).

Thamburaj, K. P., & Sivanathan, S. (2020). Marapu vaḻi eḻututal tiṟaṉum taṟkāla eḻututal tiṟaṉum oru pārvai [A study on modern and traditional writing skill]: மரபு வழி எழுதுதல் திறனும் தற்கால எழுதுதல் திறனும் ஒரு பார்வை. Muallim Journal of Social Sciences and Humanities, 141–146.

Thamburaj, K. P., Arumugam, L., & Samuel, S. J. (2015, August). An analysis on keyboard writing skills in online learning. In *2015 International Symposium on Technology Management and Emerging Technologies (ISTMET)* (pp. 373–377). IEEE.

அருளீஸ்வரி நாராயணன். (2001). *இணைந்து கற்றலின் வழி ஐந்தாம் ஆண்டு மாணவர்களினிறைய வாசிப்புத் திறனில் ஏற்படும் உச்சரிப்புப் பிழையைக் களைதல். ஆய்வேடு – ஆசிரியர் கல்விக் கழகம், ராஜா சாமாலைவார் வளாகம்*, 23–43.